Jan 2018

# The Common SENSE



பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம்–அமெரிக்கா

**Periyar Ambedkar Study Circle - America**

மனிதகுல மேம்பாட்டிற்கான பகுத்தறிவுக் கொள்கைகளை தமிழரிடையே பரவலாகக் கொண்டுசெல்வதற்காக, அமெரிக்காவில் 04 -14 -2017 அன்று நிறுவப்பட்ட" பெரியார் அம்பேத்கர் படிப்பு வட்டம் - அமெரிக்கா" அமைப்பு வெளியிடவுள்ள "The common sense " மாத இதழின் வாசகர்களுக்கு வணக்கம்!

தந்தை பெரியார் , அண்ணல் அம்பேத்கர் ஆகியோரின் கோட்பாட்டினை அடிப்படையாகக்கொண்ட அமெரிக்கவாழ் தோழர்களின் சிந்தனைகளையும், மற்ற தலைவர்களின் பகுத்தறிவுக் கருத்துகளையும் பொதுவெளிக்குக் கொணர்ந்து சரியான புரிதலை உருவாக்கும் விதமாக, "The common sense "தமிழ், ஆங்கில மொழிப் படைப்புக்களைத் தாங்கி மாதந்தோறும் வெளிவரும்.

இச்சமூகத்தில் நிகழும் அட்டூழியங்களைத் தடுக்கும் வலிமையிருந்தும், எந்தவொரு முயற்சியும் எடுக்காமல் கைகட்டி வேடிக்கை பார்ப்பவர்களே சமூகத்தின்மிகப்பெரிய எதிரியாகும் .இதைத்தான் அண்ணல் அம்பேத்கர் 'கள்ளமவுனம்' என்கிறார். இந்தக் கள்ளமவுனத்தை உடைக்கும் சம்மட்டியாக "The common sense" செயற்படும்.

புலம்பெயர் இந்திய மக்கட்தொகை உயர்வால் அமெரிக்காவில் பெருகிவரும் சாதியவாதத்தையும் ஆதிக்க மனப்பான்மையையும், அவற்றைக் களைந்து மட்டுப் படுத்தும் மருந்தான தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கரின் கோட்பாட்டினைத் தொடர்ந்து பரப்புரை செய்வோம். மேலும் இங்குள்ள தமிழ் அமைப்புகளில் நிலவும் சாதிய, தனிமனித ஆதிக்கத்தைக் கண்டிக்கும் குரலாகவும், அவற்றைச் சுட்டிக்காட்டி வெளிச்சத்திற்குக் கொண்டுவரும் கருவியாகவும் செயற்படுவோம்.

முதன்முறையாக ஆணவக் கொலைக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பைப் போராடி வென்றெடுத்த தோழர் கவுசல்யாவை வாழ்த்தும் விதமாக, அவரது நிழற்படத்தை இதழின் அட்டைப்படமாக வெளியிட்டுள்ளோம். நம்மை வாழ்த்தி அட்டைப்படத்தை வழங்கிய ஓவியர் இரவி பேலட் அவர்களுக்கு நன்றி.

பெரியாரும் அண்ணலும் வகுத்துக்கொடுத்த பாதையில் நேர்மையாகவும் , வெளிப் படையாகவும், தன்னாட்சியுடனும் தொடர்ந்து செயற்பட, தங்களின் மேலான ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் படைப்புகள், கருத்துகள், விமர்சனங்கள், விளம்பரங்களை 'thecommonsense .pasc @gmail.com' மின்னஞ்சல் வாயிலாகப் பகிர்ந்துகொண்டால் மேலும் ஊக்கம் பெறுவோம்.

வாழ்க தந்தை! வாழ்க அண்ணல்! வளர்க பகுத்தறிவு! செழிக்க மனிதநேயம்!

நன்றி

**ஆசிரியர் குழு.**

**கொளத்தூர் தா.செ.மணி**
தலைவர்
**திராவிடர் விடுதலைக் கழகம்**
**தலைமை நிலையம்**
95.டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம்
மயிலாப்பூர், சென்னை. 600 004
044-24980745 dvkheadoffice@gmail.com



இந்திய சமூகம் ஒரு ஜாதிய சமூகம். விருப்பமானத் தொழிலைத் தேர்ந்தெடுக்கவிடாமல் தடுக்கும் வருண அமைப்பினையும், விருப்பமானத் துணையைத் தேர்ந்தெடுக்கவிடாமல் தடுக்கும் ஜாதிய முறையினையும் கொண்ட சமூகம். உற்பத்தியில் ஈடுபடும் கடும் உழைப்பாளிகளை ஆகக் கீழானவர்களாக, உழைப்பாளிகளை மறு உற்பத்தி செய்யும் பெண்களை இழிவானவர்களாக ஆக்கி வைத்திருக்கும் சமூகம். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு நேர்முரணான சமூகம்..

விசாலமான படிப்பறிவும், நுண்ணிய ஆய்வறிவும் கொண்ட புரட்சியாளர் அம்பேத்கரும், விசாலமான பட்டறிவும், வீரியமிக்க செயலாற்றலும் கொண்ட பெரியாரும் இயற்கைக்கு விரோதமான இந்த ஜாதி அமைப்பை நொறுக்கித் தள்ள களம் கண்டனர். பாதிக்கப்பட்ட பிரிவினருக்கும், பாதிப்புக்குத் துணைபோகும் பிரிவினருக்கும் இழிவு, இழிவு ஒழிப்பு குறித்துக் கற்பித்தனர்; சமன்மை சமூகம் காண கிளர்ந்தெழச் செய்தனர்; பார்ப்பனிய இந்து கட்டமைப்பை வீழ்த்துவதற்கென ஒன்றிணைத்தனர்; அந்த சமூகநீதிப் போரில் பெரும் வெற்றிகளைக் கண்டனர்.


அவர்கள் பெயரால் கட்டப்பட்டுள்ள வட அமெரிக்க அம்பேத்கர் பெரியார் படிப்பு வட்டம் – அத்தலைவர்கள் குறித்து விரிவாக அறியவும், அவர்களின் சிந்தனைகளைப் பரப்பவும் 'Common Sense' என்ற பெயரில் ஒரு திங்கள் இதழை வெளிக் கொணர்வது அறிந்து பெரிதும் மகிழ்கிறோம். சம்பாதிக்கப் போன இடத்திலும் சமூக அக்கறையோடு முன்னெடுக்கும் இம்முயற்சி வெல்லவும், எதிர்பார்த்த பலன்களை வென்றெடுக்கவும் என் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

தோழமையுடன்,

11.01.2018

(தா.செ.மணி)

18/59, பழைய மார்க்கெட் வீதி, மேட்டூர் அணை-636 401. +91 94433 59666 kolathurmani@gmail.com



# தந்தை பெரியாரும் பொங்கல் திருநாளும்!

இன்று உலகெங்குமுள்ள தமிழர்கள் பொங்கல் திருநாளைத் தமிழர் திருநாளாக, தமிழ்ப்புத்தாண்டாக கொண்டாடுகின்றனர். ஒரு காலத்தில் பொங்கலுக்கு மதச் சாயம், புராணச் சாயம் பூசி அதை இந்து மதப் பண்டிகையாக்கப் பார்த்தனர். தீபாவளி, சரஸ்வதி பூசை போன்ற புராணக் கதைகளைக் கொண்டாடுவதை நிறுத்தி விட்டு தமிழர் திருநாளாம் பொங்கலைக் கொண்டாடுமாறு தந்தை பெரியார் கேட்டுக் கொண்டார்.

“மக்கள் இன்பத்துக்குப் பண்டிகை ஒரு சாதனமாக இருப்பதால் தமிழர்கள் அவர்களது குடும்பம் கூடிக்குலாவி இன்பமடைய ஏதாவது ஒரு பண்டிகை வேண்டுமே அதற்கென் செய்வது? என்று கேட்ட காலத்தில் பொங்கல் பண்டிகையைத் தமிழர் பண்டிகையாகக் கொண்டு கொண்டாடலாம் என்று சுயமரியாதை இயக்கம் விடை கூறிற்று.” – விடுதலை 19.01.1969

ஆரியர்கள் நமது பண்பாட்டை அழித்து அவர்களின் பண்பாட்டைப் புகுத்தி அதன் பெயராலேயே நம்மை அடிமைப்படுத்தினர். அதனால்தான் தந்தை பெரியார் வெறுமனே மொழிப் போராட்டம் மட்டுமே நடத்தாமல் பண்பாடு மற்றும் இனப் போராட்டம் நடத்தி அதில் வெற்றி பெறும்போதுதான் ஆரிய அடிமை விலங்கு உடையும் என்றார்.

சட்டம், சாஸ்திரம், சமுதாயம், சம்பிரதாயப் பழக்கவழக்கங்கள், புராணங்கள், இதிகாசங்கள் இவை எல்லாவற்றிலுமே நம் இழிவு நிலை நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இவை எல்லாவற்றிலிருந்துமே நம் இழிவு நீக்கமடைந்தாக வேண்டும். மொழியால் மேம்பாடும் வெற்றியும் பெற்றுவிடுவதாலேயே நமது இழிவும், இழிவுக்கு ஆதாரமான கலாச்சாரமும் ஒழிந்துவிடமாட்டா.” – தந்தை பெரியார் (‘விடுதலை ‘ – 27.01.1950)

ஆரிய/ பார்ப்பன இந்துமதப் பண்டிகைககளைக் கொண்டாடாதே, தமிழர்களுக்கு விழா என்றால் அது பொங்கல்தான், அதுதான் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட விழா, அதுதான் 'தீட்டு' என்கிற ஆரிய கருத்தாக்கத்தை ஏற்காத விழா, அதுதான் தமிழர்களின் புத்தாண்டு விழா என்று தமிழகத்தின் மூளை முடுக்கெல்லாம் சென்று பரப்புரை செய்தவர் பெரியார். அதன் தொடர்ச்சியாகத்தான் இன்று பொங்கல் என்பது தமிழர் திருநாளாக உலகெங்கும் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் என்பது தமிழனுக்கு, பார்ப்பனரல்லாதாருக்கு உள்ள ஒரு பண்டிகை. இந்தப் பண்டிகையின் பொருள் என்னவென்றால், விவசாயிகள் தாங்கள் செய்த விவசாயத்தில் உற்பத்தியான பொருளை, அவ்வாண்டு முதல் தடவையாகச் சமைப்பது மூலம் பயன்படுத்திக் கொள்ளும் நிகழ்ச்சி என்பதாகும். இது தமிழனுக்கே உரியதாகும் என பொங்கலை தமிழர் திருநாளாக உறுதி செய்கிறார் தந்தை பெரியார்.

முஸ்லிம்கள் மீது கொலை வெறித் தாக்கு தல்களும், அவர்களது திருமண விழாக்களில் புகுந்து சோதனை செய்யும் போக்கும் அங்கங்கே அரங்கேறி க்கொண்டே இருக்கின்றது.

**தந்தை பெரியார் கேட்ட பொங்கல் பரிசு :**

*1949* பொங்கல் திருநாளன்று பெரியார் விடுத்த வாழ்த்துச் செய்தியில் "ஆகவே இந்த ஆண்டு - பொங்கல் ஆண்டு தொடக்கத்தில் தமிழ் மக்களுக்கு எனது வாழ்த்தாகவும் பொங்கல் பரிசாகவும் குறளைக் கொடுக்கிறேன். இக்குறள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தமிழ்ப் பெரியோர்களால் கொடுத்து வரப்பட்டதேயாகும். அதுபோல்தான் பொங்கல் விழாவும் பல்லாண்டுகளாகத் தமிழ் மக்களுக்கு தமிழ்ப் பெரியோர்களால் கொடுத்து வரப்பட்டாலும் நான் கொடுப்பதற்கும் அவர்கள் கொடுத்து வந்ததற்கும் பேதம் உண்டு. அதாவது அவர்கள் தீபாவளி, அஷ்டமி, நவமிகளுடன் அவைபோல் பொங்கலையும் கருதிக் கொடுத்து வந் தார்கள். அப்படியே பாரதம், கீதை, இரா மாயண புராணம், மனுதர்மம் போல் குறளையும் ஒன்றாக கருதிக் கொடுத்து வந்தார்கள். இதன் பயனாய் பன்றியுடன் சேர்ந்த பசுவின் பண்புபோல் பொங்கலும், குறளும் அதனால் ஏற்பட வேண்டிய நலம் கெட்டு கேடு ஏற்படும்படி ஆயிற்று.

ஆனால் நான் கொடுப்பது ஆரியப் பண்டிகைகளை ஒழித்து விட்டுவிட்டு அந்த இடத்தில் அதற்கு பதிலாகப் பொங்கலையும், ஆரியக் கலை, தர்ம சாஸ்திரம் ஆகியவைகளான வேத சாஸ்திர புராண இதிகாசங்களை - கீதை, இராமாயணம், பாரதம் ஆகியவைகளை அடியோடு நீக்கிவிட்டு, மக்கள் உள்ளத்தில் இருந்து ஒழியச்செய்து விட்டு அதற்குப் பதிலாக அவை இருந்த இடத்தில் குறளை - குறள் ஒன்றையே கொடுக்கிறேன். ஆதலால் தமிழர்களுக்கு இப்பொங்கலாண்டில் எனது பொங்கல் பரிசாகக் குறளைக் கொடுக்கிறேன். இதை எப்படிக் கொடுக்கிறேன் என்றால், தமிழ் மக்களுக்கு எனது காணிக்கையாக அவர்கள் என்பால் கொண்டுள்ள அருளுக்கு, அன்புக்கு, நம்பிக்கைக்கு தட்சிணையாகக் கொடுக்கிறேன்." என்றார். அத்தோடு இதற்கு பதில் பரிசாக தமிழ் மக்கள் தீபாவளி போன்ற ஆரிய பண்டிகைகளை விடுத்து பொங்கலை மட்டுமே கொண்டுவோம் என்றும், பாரதம், இராமாயணம், கீதை, புராணம் முதலிய ஆரிய இலக்கியம், இதிகாசம், தர்ம சாஸ்திரம் முதலியவைகளை ஒழித்து, விலக்கி, குறளை ஏற்று படித்து உணர்ந்து அதன்படி நடப்பது என்றும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பொங்கலை மட்டுமல்ல திருக்குறளையும்

மக்களிடம் கொண்டு சென்றது தந்தை பெரியார்தான் !

பொங்கலே தமிழரின் புத்தாண்டு என தமிழறிஞர்கள் பலரும் கூடி முடிவு செய்தனர். அதிலும் பெரியாரின் பங்கு உண்டு.

1921ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் தலைமையில் 500க்கும் மேற்பட்ட புலவர் பெருமக்கள் கூடி எடுத்த மூன்று முக்கிய முடிவுகள்.

1) திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவது.

(2) அதையே தமிழர் ஆண்டு எனக் கொள்வது

(3) திருவள்ளுவர் காலம் கி.மு.31

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை. இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள், கிழமைகள் வழக்கில் உள்ளவை என்றும் முடிவு செய்யப் பட்டது.

அதன்பின் திருச்சியில் 1937 டிசம்பர் 26 இல் தமிழர் மாநாடு, அதன் தலைமை நாவலர் சோமசுந்தர பாரதியார்.

அந்த மாநாட்டில் தந்தை பெரியார், கா.சு.பிள்ளை, தெ. பொ.மீனாட்சிசுந்தரனார், தமிழ்த் தென்றல் திரு.வி.க., தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் உள்ளிட்டோர் கூடினர்.

தமிழ்க் கடல் மறைமலை அடிகளார் சான்றுகளுடன் தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம், பொங்கலே தமிழர் விழா என்று அறுதியிட்டுப் பேசினார்.



நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று தந்தை பெரியார் கூறியதுதான் தாமதம் - மாநாடே களை கட்டியது!

தமிழ்த் தென்றல் திரு.வி.க., எழுந்து “என்னுடைய அருமை நண்பர் ஈ.வெ.ரா. அவர்கள் என்னோடு இருந்து பாடுபட்டவர். நானும் அவரும் இந்தச் சுயமரியாதை இயக்கத்தை - நான் தாயாக இருந்தேன்; அவர் தந்தையாக இருந்து வளர்த்தார். இன்று அதே சுயமரியாதை இயக்கத்தினுடைய தலைவர் என்னுடைய அருமை நண்பர் ஈ.வெ.ரா. அவர்கள் அந்தப் பொங்கலை ஏற்றுக் கொண்டமைக்கு இந்தத் தமிழகமே பாராட்டுதலை செய்வதற்குக் காத்துக் கொண்டிருக்கிறது” என்று குறிப்பிட்டார்.

பார்ப்பனர் பிடியில் சங்கராந்தியாக,இந்திர விழாவாக இருந்த பொங்கல் பண்டிகையை ஒட்டு மொத்த தமிழருக்குமான தமிழர் திருநாளாக, தமிழர் புத்தாண்டாக மாற்றியது தந்தை பெரியாரும், சுய மரியாதை இயக்கமுந்தான்.

பொங்குக பொங்கல்!

பொங்குக தமிழ் மக்கள் மானமும் அறிவும்!!

**கா.ஆசிப் (கனடா)**



# இந்துத்துவ பூமியில்

இந்தியத் திருநாட்டில் பார்ப்பனீய பயங்கரவாதத்திற்குப் பகடை உருட்டும் பல மாநிலங்களில் முதன்மை மாநிலமாம் குஜராத் மாநிலத்தில் பார்ப்பனீயத்தின் கொடூரத் தாக்குதலில் கேட்பாரின்றி சிக்கித் தவித்த ஓர் சமூகத்தின் அவலத்தைக் குரல் கொடுக்கத் துணிந்த புரட்சி இளைஞனைப் பற்றித்தான் இக்கட்டுரை விரிவாக விளக்கவிருக்கிறது. ஆம் நீங்கள் அறிந்த பார்ப்பனீய நச்சு மண்ணில் முளைத்த நெருப்புச் செடி, இந்துத்வா இழிவுகளை இடித்துரைத்து இயங்க வழியின்றி இருந்த சமூகத்தின் இன்னலின் ஈரத்தில் வளர்ந்த ஜிக்னேஷ் நட்வர்லால் மேவானி என்ற புரட்சி இளைஞனை பற்றித்தான் இக்கட்டுரை விவரிக்கிறது. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, சர்தார் வல்லபாய் பட்டேல் போன்ற ஊரறிந்த, இந்துத்துவத்தில் ஊறிய, மேலும் அதை பத்திரமாக பாதுகாத்துக் கட்டமைத்த தலைவர்களால் அடையாளம் காணப்பட்ட குஜராத் வரலாற்றில் முதல் முறையாக விளிம்பு நிலைச் சமூகத்தில் தோன்றிய இளம் தலைவனால் அடையாளப்படுத்தப்படு கிறது என்றால் மிகையல்ல. திசம்பர் திங்கள் 11 -ம் நாள் 1982 -ம் வருடம் அகமதாபாத்தில் பிறந்த ஜிக்னேஷ் பள்ளிப் பள்ளிப்படிப்பை முடித்ததும்



# ஓர் இளம் புரட்சியாளன்

ஹரிவல்லபதாஸ்-காளிதாஸ் கலைக் கல்லூரியில் 2003 -ம் ஆண்டு ஆங்கில இலக்கியத்தில் பட்டம் பெற்றார். பிறகு 2004-ம் ஆண்டு பத்திரிக்கைத் துறைக்கான பட்டப்படிப்பையும் முடித்து குஜராத்திய மொழியில் பிரச்சுரமான அபியான் என்ற இதழின் பத்திக்கையாளராக சில நாள் பணிபுரிந்ததோடு 2013 -ம் ஆண்டு சட்டப் படிப்பினை முடித்து வழக்கறிஞரானார்.

இளம் வயதில் எந்த ஒரு சாதிய இழிவுகளையும் , மத வன்முறைகளையும் காணவியலாத ஒரு மாநிலத்திலா வாழ்ந்தார்? மொத்தப் பார்ப்பனீயத்தின் கோரக் கொடுமைகளை மெத்த படித்தவரும் வாழ்வியலாகக் கொண்ட மாநிலத்திலல்லவா வாழ்ந்தார், வளர்ந்தார். எனவே பார்ப்பனீயத்தின் கொடுமைகளையும் இதனால் விளையும் வன்மங்களையும் பார்த்து வளர்ந்ததினால் இயல்பிலேயே இந்துத்துவா எதிர்ப்பும் , வன்கொடுமை களை எதிர்த்து குரல் கொடுக்கும் மனோப வமும் கொண்டிருந்தார் என்பது வியப்பல்ல. பதவி, அதிகார போதைக்கு மயங்கி இந்துத்துவ கும்பலின் ஏவல் வேலை களுக்கு சில தலைவர்கள் அடமானம் வைக்கப்பட்ட இன்றைய சூழலில் களத்தில் இறங்கியது என்பது ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை ஒலிக்க வாராது வந்த மாமணி போலத்தான் என்றால் மிகையல்ல.

ஒரு தலைவன் என்பவனோ அல்லது ஒரு இயக்கமோ அன்றைய அடிப்படைத் தேவையின் சூழலைப் பொறுத்து காலத்தின் கட்டாயத்தால் உருவாக்கப்படுப வர்கள்தானே தவிர தன்னியல்பாக உருவாகிறவர்களல்ல. அப்படி தன்னியல்பாக நானே தலைவன் என்று வந்தவனை களம் அனுமதித்ததும் கிடையாது அப்படியே ஒருவேளை களத்தில் இறங்கிவிட்டாலும் நெடுநாள் தாக்குப்பிடித்து நின்றதும் கிடையாது. மேற்குறிப்பிட்டபடி அபியான் என்ற இதழில் பணியாற்றியதை கைவிட்டு பின் சட்டப் படிப்பை முடித்துவிட்டு வழக்கறிஞராக தானுண்டு தன் வேலையுண்டு என்றிருந்த இந்த இளைஞனை உணர்வுடன் தூண்டியது உனா(una ) என்ற கிராமத்தில் நடந்த வன்கொடுமை சம்பவம். அதாவது இறந்த பசு மாட்டின் தோலை உரித்ததாக சொல்லி நான்கு தலித் இளைஞர்களை பசு பாதுகாவலர்கள் என்ற போர்வையில் உள்ள இந்துத்துவ சங்க பரிவார குண்டர்கள் கட்டி வைத்து அடித்து உதைத்தனர்.இந்த சம்பவம் நாடு முழுவதும் காணொளியாக வலைத்தளங்களிலும், செய்தியாக அச்சு



மற்றும் காட்சி ஊடகங்களிலும் பிரச்சுரமானது மேலும் மக்களிடையே பல அதிர்வுகளையும் உருவாக்கியது.இந்த சம்பவத்தை பல முற்போக்காளர்கள் , கருத்தியலாளர்கள் விவாதித்தார்கள், கண்டித்தார்கள். ஆனால் ஜிக்னேஷ் மேவானியோ இக்கொடுமையைக் கண்டித்து குஜராத் மாநிலத்தின் தலைநகரான அகமதாபாத்திலிருந்து பெருந்திரளாக இளைஞர்களுடன் உனாவை நோக்கி யாத்திரையாகச் சென்றார்.

ஆண்டாண்டு காலமாக சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் மனவலிகள்

நிறைந்த வாழ்க்கையினை பாடமாக படித்தாலும் வராத சோகம், அவர்களை நேரில் சந்திக்கும் பொழுது அவர்களின் கண்களில் வழியும் ஒரு துளி கண்ணீர் ஓராயிரம் சோக கதைகள் படித்த வலியினை தரும். ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டும்தான் இத்தகைய வறுமையிலும், ஏழ்மையிலும் வாழ்கிறார்களா என்றால் - இல்லை; மற்ற சமூகங்களிலும் வறுமையும் ஏழ்மையும் உண்டு, ஆனால் வன்கொடுமைகள் (ஆணவக்கொலைகள், சாதியச்சீண்டல், பொதுத்தளத்தில் பங்கெடுப்பதில் சிக்கல்) என்பது ஒடுக்கப்பட்ட சமூகத்திற்கு எதிராகத்தான் நிறைய நடக்கிறது.உனாவை அடைந்ததும் அங்கு பெருந்திரளாக கூடியிருந்த மக்கள் முன்னால் உரையாற்றினார். அந்த கூட்டத்தில் பெரும் முழக்கங்களாக எழுப்பப்பட்டது யாதெனில் தலித்துகள் இறந்த மாடுகளை அகற்றுதல் போன்ற இழித்தொழில்களை விட்டொழிக்க வேண்டும். அதேபோல ஊராட்சிகளில் உள்ள கடைநிலை தொழிலான தோட்டி(*mineal*) போன்ற தொழில்களை விட வேண்டும். அம்பானிகளுக்கும் , அதானிகளுக்கும் இலவசமாக நிலங்களை கொடுக்கும் இந்த அரசு பஞ்சமி நிலங்களை மீட்டு தலித்துகளுக்கு தலா 5 ஏக்கர் கொடுக்க வேண்டும்.இந்த முழக்கங்கள் மாநிலம் முழுவதும் பரவியதோடு குறைந்தபட்சம் இளைஞர்களிடம் கொஞ்சம் சுரணையை தூண்டியது. இதன் விளைவாக இறந்த மாடுகளை அகற்றுவதை கைவிட்டார்கள், ஆனால் வழக்கம் போல அரசிற்கு எந்த சுரனையும் வரவில்லை. குஜராத் மாநிலத்தின் முக்கிய நகரங்களின் வீதிகள் இறந்த மாட்டினை அப்புறப்படுத்தாதன் காரணமாக நாற்றமாய் நாறத் தொடங்கியது விளைவு நாடே திரும்பி பார்த்தது. இந்திய திருநாட்டின் பிரதமர் திருவாளர் மோடி தனது திருவாய் திறந்தார் “தலித்துகளை தாக்குவதாக இருந்தால் முதலில் என்னை தாக்குங்கள்” என்று போலி மற்றும் நீலி கண்ணீர் வடித்தார்.

மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி கொண்டுவரப்பட்ட பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டை எதிர்த்து உத்திர பிரதேசத்திலிருந்து தெற்கே குமரி வரை ரத யாத்திரை என்ற பெயரில் இரத்த யாத்திரைகள் நடந்த இந்நாட்டில் வன்கொடுமைகளை கண்டித்து ஜிக்னேஷ் மேவானியின் தலைமையில் நடத்தப்பட்ட அம்ருதா யாத்திரை மிகப்பெரிய எழுச்சியை உண்டாக்கியது என்றால் அது மிகையல்ல.இந்த யாத்திரையின் எழுச்சியில் விளைந்த பொறி கருத்தியலா ளர்களையும் தட்டி உணர்வூட்டியது. இதற்கு உதாரணமாக சொல்ல வேண்டுமெனில் அம்ருத் லால் என்ற எழுத்தாளர் குஜராத் மாநில அரசின் சார்பாக வழங்கப்பட்ட விருதை திருப்பி கொடுத்து தனது எதிர்ப்பை பதிவு செய்தார்.உனாவை நோக்கி நடந்த யாத்திரையில் கருவாகி, பெருங்கூட்டத்தின் எழுச்சியில் உருமாறி இறுதியில் ராஷ்டிரிய தலித் அதிகார

**இறந்த மாடுகளை அகற்றுதல் போன்ற இழித் தொழில்களை விட்டொழிக்க வேண்டும். அதே போல ஊராட்சி களில் உள்ள கடைநிலை தொழிலான தோட்டி (mineal) போன்ற தொழில்களை விட வேண்டும்.**

**பல்லாண்டு காலமாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய துப்புரவு பணியாளர் களுக்கான வேலையை நிரந்தரமாக்கியது போன்றவை இவரின் போராட்டத்திற்கு கிடைத்த பெரும் வெற்றிகள்.**

அமைப்பு மற்றும் உனா தலித் அட்யாச்சார் லதாத் சமிதி என்ற இயக்கம் உருவானது, ஜிக்னேஷ் அதன் ஒருங்கிணைப் பாளரானார். ஒருங்கிணைப்பாளரானதும் தலித் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய பஞ்சமி நிலம் வழங்கப்படாமல் இருப்பதைக் கண்டித்து ரயில் மறியல் போராட்டத்தை அறிவித்தார். இதைக் கண்ட அரசு உடனடியாக அவரை அழைத்து இது இந்திய , பாகிஸ்தான் எல்லையில் தேவையற்ற பதற்றத்தை உண்டாக்கும் எனவே போராட்டத்தை கைவிட வேண்டும் என்றும், அவரின் கோரிக்கை நிறைவேற்றபடும் என்றும் உறுதியளித்தது. மேலும் பல்லாண்டு காலமாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய துப்புரவு பணியாளர்களுக்கான வேலையை நிரந்தரமாக்கியது போன்றவை இவரின் போராட்டத்திற்கு கிடைத்த பெரும் வெற்றிகள்.

ஆம் ஆத்மி கட்சியில் இணைந்து செயல்பட்டுக்கொண்டிருந்த அவர் தலித் மக்களுக்கு போதிய முக்கியத்துவம் தரவில்லை என்று சொல்லி அதிலிருந்து விலகினார். இன்று தனது அமைப்பிற்காக அல்லும் பகலும் அயராது உழைக்கிறார். பத்திரிக்கையாளர் ஒருவர் உங்கள் அமைப்பை குஜராத்தைத் தாண்டி விரிவுபடுத்துவீர்களா என்று கேட்ட கேள்விக்கு, ஆம் உத்திர பிரதேசம் , ராஜஸ்தான் , கேரளம் , கர்நாடகம் மற்றும் மராட்டிய மாநிலங்களிலும் விரிவுபடுத்தப்படும் மற்றும் குஜராத் மாதிரி எனப்படும் பொய்ப்பிம்பம் பிரச்சாரமாக்கப்படும் என்றார்.இங்கு நாம் கவனிக்க வேண்டியது என்னவென்றால் அருகிலே உள்ள கேரளா , கர்நாடகத்தை குறிப்பிட்டுப் பேசியவர் மறந்தும் கூட தமிழ்நாட்டைக் குறிப்பிடவில்லை ஏனெனில் இது பெரியார் பண்படுத்திய மண் என்பதை நன்கு புரிந்திருப்பதுதான் அவரின் அரசியல் அறிவு.குஜராத் மாநிலத்தின் வட்கம் சட்டமன்றத் தொகுதியில் காங்கிரஸ் பேரியக்கத்தின் ஆதரவுடன் சுயேட்சையாக போட்டியிட்டார், தேர்தல் பிரச்சாரத்தில் மேடைதோறும் மிகவும் தீர்க்கமாகப் பெரியார், அம்பேத்கர் பெயரை உச்சரித்தார் இறுதியில் பெரும் வெற்றியைப் பெற்றார்.பல ஆண்டுகாலமாக பாஜக -வின் கட்டுபாட்டிலிருந்த தொகுதியில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் சக்கரவர்த்தியை இருபதாயிரம் வாக்குகள் வித்தியாசத்திற்கும் மேல் வீழ்த்தி தனது சாம்ராஜ்யத்தை நிறுவினார். இன்றைக்கு குஜராத் மாநிலத்தின் சட்ட மன்றத்தில் சுயேச்சையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இளம் சட்டமன்ற உறுப்பினராக வலம் வருகிறார். மென்மேலும் அவர் சமூகப் பணி தொடர வாழ்த்துவோம், மேலும் அவருடன் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோருக்கான அமைப்பின் தலைவர் அல்பேஷ் தாக்குர் என்ற இளைஞரையும் வாழ்த்துவோம்.வாழ்க இவர்கள் போராட்டம்... வளர்க இவர்கள் அரசியல் பணி...வெல்க இவர்கள் இலட்சியம்...

**–திருமலைஞானம்**




# நினைவில் காடுள்ள மிருகங்கள்!



பாரம்பரியம், கலாச்சாரம் பேசும் தமிழ்ச் சமூகத்தில் காலம் காலமாக இருக்கிறது ஆணவக் கொலைகள். கணியன் கூத்திலும் வில்லுப்பாட்டிலும் இதற்கான சான்றுகள் இருக்கின்றன.

கன்னிச்சாவு என்னும் நாட்டுப்புற இலக்கியத்தில் , இவை தீட்டுச் சடங்கு கொலை என விவரிக்கப்ப்டுவதாக கூறுகிறார் ஆய்வாளர் எ .கே பெருமாள் . கி பி பதினாறாம் நூற்றாண்டு காலம் முதல் சான்றுகள் இருப்பதாக கூறும் அவர் , இது தொடர்பான ஐம்பது கதைகளையும் சேகரித்து உள்ளார். சாதியால் கட்டமைக்கப்பட்ட காட்டுச் சமூகமாக நாம் இருந்துள்ளோம்.

இருந்தோம் இல்லை ,இன்னும் அப்படித்தான் இருக்கின்றோம்



என்பதை அதிர, அதிர பறை அடித்துச் சொல்கிறார் கௌசல்யா.

**நவீனமயமாக்கலும், உலகமயமாக்கலும் , தொழில்நுட்ப முன்னேற்றங்களும் கண்களை மறைக்க எல்லாவிடத்திலும் எளிதாக கேட்கப்படும் கேள்வி- இப்ப எல்லாம் யாருங்க சாதி பாக்குறா ?**

நினைவில் காடுள்ள மிருகங்கள் நம்மில் பரவலாக உலாவிக் கொண்டுதான் இருக்கின்றன. இந்த ஐந்தறிவுவாதிகள் பண்பாடு, பாரம்பரியம் என்று பேசி ,சாதியை மட்டும் காத்து , சாதிச் சங்கங்களின் கிளைகளை இணையத்தில், கைபேசியில் நடத்தி, அதனை வீரமாகவும் , பெருமையாகவும் பேசித் திரிகின்றனர் .

வெறுப்பினை மட்டுமே மூலதனமாகக் கொண்டு அதனைக் குறையாமல் காக்க மிருகத்தனம் முற்றிப்போய் சங்கர்களை இரையாக்கிக் கொல்கின்றனர்.

யார் சாதி பார்க்கிறார்கள் என்பதற்கு கவுசல்யாவின் முன் வைக்கப்படும் விமர்சனங்களும், தீர்ப்பை விமர்சித்து இடப்பட்ட பதிவுகளும் பதில்களாக கொட்டிக் கிடக்கின்றன . பிறப்பில் இருந்து இறப்பு வரை சாதி தன் விகாரத்தை காட்டிக்கொண்டே இருக்கிறது . பிரித்துப் பார்ப்பதால் பலன் அடைபவர்கள் தொடர்ந்து அதற்கு தீனி போடுகிறார்கள் .

வாழ்க்கைத்தரம் , உடை , பாவனை , நுகர்பொருட்கள் என அனைத்தும் நவீனமடைந்தாலும் இந்த ஐந்தறிவுவாதி களின் மனம் அப்படியே இருக்கின்றது . பாவம் ஐந்தறிவுதானே !!!

காதல், கல்யாணம் ,கண் முன் கணவனின் கொலை , தானும் தாக்கப்பட்ட அதிர்ச்சி ,மன அழுத்தம், தற்கொலை முயற்சி, ஏற்றுக் கொள்ள முடியாத இழப்பு ,இத்தனையையும் எதிர்கொண்ட பின்பும், மனதிடம் குறையாமல் சாதி மறுப்பு போராளியாக களத்தில் நிற்கிறார் கவுசல்யா . அதுவும் நேர்மறையான போராட்டக் களத்தில்.

சாதி மறுப்பு மேடைகளிலும் , திருமணங்களிலும் அடையாளமாக மாறிவிட்ட கவுசல்யா தொடர்ந்து தன் எதிர்ப்பை தன் செயல்களால் இடைவிடாது பதிவு செய்கிறார் . தன் மீது தொடுக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வழக்கு தொடர்ந்ததோடு மட்டுமில்லாமல் , 58 தடவை குற்றவாளிகளின் ஜாமீன் மனுக்களுக்கு உறுதியாக எதிர்ப்பு

தெரிவித்து இருக்கிறார் . இவரின் வழக்கும் அதன் தீர்ப்பும், மனதில் காடுள்ள மிருகங்களுக்குக் கடிவாளம் போட்டிருக்கிறது.

தனது அம்மா உட்பட விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக முறையீடு செய்வேன் என்று நீதிமன்ற வளாகத்திலிருந்து உறுதியாகச் சொன்னதெல்லாம் வேற லெவல். இது பழிவாங்கும் செயல் அல்ல , தன்னை விட , தன் குடும்பத்தை விட எனக்கான நீதி முக்கியம் என்ற உறுதி .

ஒரே வருடத்தில் இந்த மாற்றம் எப்படிச் சாத்தியம் ? இந்த தீர்க்கமும் , தெளிவும் எங்கிருந்து வந்தது ? சங்கர் கொலைக்கு நீதி கேட்டுத் தொடங்கிய பயணம் , சாதி ஒழிப்பாகவும் , சமூக நீதியாகவும் எப்படி மேம்பட முடிந்தது ? கவுசல்யாவின் வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில் “இப்போது இருக்கும் நான் பெரியாரால் பெற்றெடுக்கப்பட்டவள்” .

**தந்தை பெரியார் – இறந்து 44 ஆண்டுகளுககு பிறகும் இந்த மனிதரால் , சாதியால் பாதிக்கப்பட்ட , கணவனை இழந்த கவுசல்யாவை முடங்கிப் போக விடாமல் ,ஒரே வருடத்தில் போராளியாக மாற்ற முடிகிறது . பிறப்பு , இறப்பு என்று ஒரு சகாப்தத்தை அளவிட முடியுமா ? படிக்கும் ஒவ்வொரு முறையும் மனிதன் பண்படும் விதையை அல்லவா எழுத்துக்களாக விதைத்துச் சென்றிருக்கிறார்?**

சமூக நீதிக்கு எதிராக எங்கெல்லாம் அடக்குமுறைகள் கட்டவிழ்க்கப்படுகிறதோ அங்கெல்லாம் கவுசல்யாக்கள் முளைத்து வருவார்கள் . ஏனெனில் இது “பெரியார் மண்” . கவுசல்யாவின் பலம் என்பது பகுத்தறிவின், சித்தாந்தத்தின் பலம், உங்களாலும் முடியும் ஜாதியவாதிகளே பெரியாரை படியுங்கள் , துருப்பிடித்த சிந்தனைகளில் இருந்து வெளியே வருவது கடினம் தான் . முயற்சி செய்யுங்கள், மனநோயிலிருந்து விடுபட்டு, குறைந்தபட்சம் மனிதர்கள் ஆகலாம்.

அறிவூட்டு , உணர்வூட்டு , அணிதிரட்டு



– என்று நீங்கள் தொடங்கிய “சங்கர் தனிப்பயிற்சி மையம்” விருட்சமாக வளரவும் , ஆணவக் கொலைக்கு எதிராக தனிச் சட்டம் என்ற கோரிக்கை வெற்றி பெற்று , மேலும் பல பரிமாணங்களில் சாதி எதிர்ப்பை வாழ்வியலாகக் கொண்டுள்ள தங்களின் பயணம் தொடரவும் வாழ்த்துக்கள் சகோதிரி !!!

இது கௌசல்யாவின் போராட்டம் மட்டுமல்ல! நமது பங்காக, சங்கர்களும்– கௌசல்யாக்களும் தாங்கள் விரும்பிய வாழ்க்கை வாழ, சாதி கடந்த சமத்துவமும் , மதம் கடந்த மனிதநேயமும் நம் சமூகத்தின் அங்கமாய் மாற , ஆணவக் கொலை என்னும் வார்தையையே தமிழகத்தின் வரலாற்றில் இருந்து அகற்ற, நாம் எதிர்ப்பதோடு மட்டுமல்லாமல் நமது பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுப்போம் “சாதி என்பது கெட்ட வார்த்தை”

**–பாவி**



# இந்துத்துவ மாட்டரசியல்!!

பசுக்களைப் புனிதம் என்றும் அவைகள் முனிகள், தேவர்கள், கடவுள்கள் குடியிருக்கும் கோவில், ஆகவே கோமாதா என்றும் தங்கள் முன்னோர்கள் அதாவது ஆரியர்கள் இறைச்சியை உண்டதில்லை என்றும் குறிப்பாகப் பசுவை உண்டதில்லை என்றும் அடுக்கடுக்கான பொய்களை வரலாற்று ஆதாரங்களுக்கு மாறாக பேசியும் எழுதியும் வருகின்றனர். உண்மையில் உயிரினங்களைப் பலி தரும் வேள்விகள் ஆரியர்களால் கொண்டுவரப்பட்டது என்பது வரலாற்றாய்வு அறிஞர்களால் நிறுவப்பட்டுள்ளது.

இந்திரனுக்குக் காளைகள், அக்னி, வருண, மித்ரா பகவானுக்கு செந்நிற பசு, புள்ளிகளைக் கொண்ட பசு என விதவிதமாக பசுக்கள் பலியிடப்பட்டு விருந்தளிக்கப்பட்டது என்று ரிக் வேதம் விளக்குகிறது. அஸ்வமேதம், ராஜசூயம், வாஜபேயம் போன்ற வேள்விகளில் பசு, எருது, காளை ஆகியவற்றின் இறைச்சிகள் அவசியமானதாக







இருந்தன. மாட்டிறைச்சியையும், உணவு தானியங்களையும் பார்ப்பனர்களுக்கு தட்சணையாகத் தரப்பட்ட பசுக்கள் பற்றி அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி பற்றி விரிவாக ஆய்வு செய்து அண்ணல் அம்பேத்கர் எழுதியது "பார்ப்பனர்கள் மிகப் பெருமளவில் மாட்டிறைச்சி சாப்பிடுபவர்களாக இருந்துவந்த ஒரு காலம் இருந்தது. அச்சமயம் பார்ப்பனர் அல்லாதோரும் மாட்டிறைச்சி சாப்பிடுபவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால், நாள்தோறும் அதனைச் சாப்பிடக்கூடிய நிலையில் அவர்கள் இல்லை. .... பார்ப்பனர் விசயம் அப்படியல்ல. அவர் புரோகிதராக இருந்தார். பசு பலியிடப்படாத நாளே இல்லை எனலாம். பார்ப்பனருக்கு ஒவ்வொரு நாளும் மாட்டிறைச்சி விருந்து நாள்தான். இதன் காரணமாக அந்நாட்களில் பார்ப்பனர்கள் மிக அதிகமாக மாட்டிறைச்சி சாப்பிடு பவர்களாக இருந்து வந்தனர்." (பக். 153. பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்பு, தமிழ் தொகுதி 14. பக்கம் 153, தீண்டப்படாதவர்கள் யார்?)

இப்படி செந்நிறம், புள்ளிவைத்தது, வைக்காதது என வகை வகையான பசுக்களைச் சுவைத்த பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி உணவை ஏன் கைவிட்டனர்? அதைப் புனிதமாக்கி வழிபடுவது ஏன்? என்ற ஆய்வை அண்ணல் அம்பேத்கர் மேற்கொண்டார். சுமார் 400 ஆண்டு காலம் பவுத்தத்திற்கும், பார்ப்பனியத்திற்கும் இடையேயான போராட்டத்தில் இதற்கான விடைகள்






இருப்பதை அவர் கண்டார். பவுத்தமும், சமணமும் இறைச்சி உணவை எதிர்க்கவில்லை. வேள்விகளையும் ஏராளமான விலங்குகளைக் குறிப்பாக பசுக்களை, எருதுகளை பலியிடுவதையும் கொண்ட பார்ப்பனிய கோட்பாடுகளை நிராகரித்தன மக்கள் பவுத்தர்களின் பிரச்சாரத்தையும், கோட்பாடுகளையும் ஆதரித்தனர், பார்ப்பனர் தங்கள் அதிகார நிலையை இழந்தனர்.

பசு இறைச்சியின் முக்கியத்துவம் குறித்தும், பார்ப்பனர்களின் அந்த புரட்டு குறித்தும் தந்தை பெரியார் பேசுகிறார், தோழர்களே! பார்ப்பனர்கள் எல்லாம் மாடு எருமை தின்றவர்கள். இராமாயணம் பாரதம் மனுதர்மம் பார்த்தாலே தெரியும் யாராவது விருந்தாளி வந்தால் கன்றுக்குட்டியை அறுத்துத்தான் விருந்து வைத்ததாகக் காணலாம். பிறகு, அதனை பார்ப்பனர் விட்டு விட்டு சாப்பிடுகின்ற நம்மவர்களைக் கீழ்மக்கள் என்று கூறி விட்டார்கள். மலிவு விலையில் கிடைக்க பெரிய பெரிய மாட்டுப் பண்ணைகள் ஏற்படுத்த வேண்டும். மாடு தின்பது பாவம் அல்ல. அப்படியே பாவம் என்றாலும், கோழித் தின்பதில் எவ்வளவு பாவமோ அவ்வளவு பாவம் தான் மாடு தின்றாலும் ஆகும். நமது சாமிக்கே மாடு, எருமை, கோழி, பன்றி முதலியன காவு கொடுத்துக் கொண்டுதானே வருகின்றார்கள். ஆகவே மக்கள் தாராளமாக மாட்டுக்கறி முதலிய இறைச்சி சாப்பிட்டு பலசாலியாக ஆகவேண்டும். - “விடுதலை” 03.02.1964. மாட்டுக்கறி உண்ணவேண்டும் என்று வலியுறுத்தியதோடு மட்டும் இல்லாமல் தனது பொதுக்கூட்ட மாநாடுகளில் மாட்டிறைச்சி விருந்தும் வைத்து தாழ்த்தப்பட்டவர்களைக் கொண்டு சமைக்க செய்தவர்.

**முஸ்லிம்கள் மீது கொலை வெறித் தாக்கு தல்களும், அவர்களது திருமண விழாக்களில் புகுந்து சோதனை செய்யும் போக்கும் அங்கங்கே அரங்கேறி க்கொண்டே இருக்கின்றது.**

இப்படி பல சீர்திருத்த தலைவர்கள் மாட்டிறைச்சி உணவை வலியுறுத்தினாலும் இறைச்சி சாப்பிடுபவர்கள் அயோக்கியர்கள், பொய்யர்கள், திருடர்கள், நேர்மையற்றவர்கள், ஏமாற்றுக்காரர்கள், சண்டை போடுபவர்கள், வன்முறையாளர்கள்,பாலியல் குற்றம் புரிபவர்கள் என்று முத்திரை குத்தி 6-ம் வகுப்பு புத்தகத்தில் “ஆரோக்யமான வாழ்க்கைக்கு வழி” என்ற தலைப்பில் பாடமாக எழுதி





குழந்தைகள் மனதில் விஷத்தை விதைத்துள்ளது மத்திய கல்வித் திட்ட குழு.

மனிதருக்கு நலன் தரும் மாட்டுக்கறியை உண்பவர்களை இழிவானவர்களாக நடத்துவதும், இழிவானவர்களாகக் கருதுவதும் இன்றும் நடை முறையில் இருக்கிறது. மாட்டுக்கறியை மிகக் கேவலமான உணவாகவும் அதனை உண்பவர்களை தீட்டாக கருதுவது பார்ப்பனிய மனநிலை. மாட்டிறைச்சி உண்பவர்கள், பறை இசைக்கருவி, இசைக்கலை ஞர்கள், என இவர்கள் மீதான தீண்டாமைகளும் தொடர்கின்றன.

இந்துத்துவ பாஜக ஆட்சிக்கு வந்தது முதல் சிறுபான்மையினர் மாட்டிறைச்சி சாப்பிடுகிறார்கள் என்றும்,வைத்திருந்தார்கள் என்றும் குறிப்பாக முஸ்லிம்கள் மீது கொலைவெறித் தாக்கு தல்களும், அவர்களது திருமண விழாக்களில் புகுந்து சோதனை செய்யும் போக்கும் அங்கங்கே அரங்கேறிக்கொண்டே இருக்கின்றது. அதே போன்று மாட்டிறைச்சிக்கும் படு திண்டாட்டம், அவர்கள் கைப்பற்றும் ஒவ்வொரு மாநிலத்திலும் மாட்டிறைச்சிக்குத் தடை இல்லை கோழி, மீன், ஆடு என ஒட்டுமொத்த இறைச்சிக்கே தடை, இல்லை கடைகளை நகரங்களில் இருந்து நீண்ட தொலைவு செல்ல கூறி வியாபாரிகளை தொல்லைக்குட்படுத்துவது, இல்லை கடைகள் நிறந்தரமாக மூட நிர்பந்திப்பது. இப்படி பசுவை பாதுகாத்துகொன்டே. இவர்கள் செய்யும் அடுத்த புனித பணி மாட்டிறைச்சியை ஏற்றுமதி செய்து உலக அளவில் முதலிடம் பிடிப்பது.


இப்படி ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய மாட்டிறைச்சி சந்தையை வைத்திருப்பவர் களில் பெரும்பாலானோர் இந்துக்கள் அதிலும் பார்ப்பனர்கள், மற்றும் மார்வாடிகள் (இவர்கள் பூமிக்கு கீழே விளைவதைக் கூட உண்ணமாட்டார்கள் அந்த அளவு சைவப் பிராணிகள்) தான்.

ஆனால் தாழ்த்தப்பட்ட, முஸ்லீம் மக்களின் உணவாக உள்ள மாட்டிறைச்சிக்கு தடைவிதித்து அதன் மூலம் இந்துத்துவ முதலாளிகளை மேலும் முதலாளிகளாக மாற்றுவது மட்டும் தான் நோக்கம். இவர்களின் மாட்டரசியல் என்பது உயர் சாதியினருக்கான தனிப்பட்ட ஆதாயத்திற்காகவும் அரசியல் ஆதாயத்திற்காகவும் முன்னிறுத்தப்படும் கோட்பாடே தவிர மாடுகள் மீதான உயிர்ப் பாசமோ,உயிர் நேயமோ கிடையாது.

ஒரு புறம் மாடு புனிதம் மறுபுறம் மாட்டிறைச்சி ஏற்றுமதி வணிகம்! என்பதே ஆர்.எஸ்.எஸ் இந்துத்துவ அடி நாதம்.

**–சுபாசு சந்திரன்**

# ஆறறிவின்



# அற்புதம்..!



இந்த உலகில் மிகப் பெரியது கடவுள் சக்தி என்று ஒரு சாராரும், இல்லை ! இல்லை ! அறிவியலின் சக்திதான் மிகப் பெரியது என்று ஒரு சாராரும், இவை இரண்டும் இல்லை மனிதம்தான் மிகப் பெரியது என்று ஒரு சாராரும் நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில் கடவுள் சக்தியே மிகப் பெரியது என்று வாழ்பவர்கள் தன் சக மதத்தினரைக் காட்டிலும் வேற்று மதத்தவனை எவ்வாறு மதிக்கிறார்கள் என்பதை நாம் தினசரி உலகெங்கும் நடக்கும் வன்முறைச் சம்பவங்கள் மூலமாக பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

சில மதத்தைப் பின்பற்றுபவர்கள் வேற்று மதத்தவனை இழி சொல் கொண்டு அழைப்பதும், சில மதத்தவர்கள் மற்ற மதத்தின் கடவுள்களைப் பழிப்பதும், சில மதங்கள் தன்னுடைய சொந்த மதத்தவனையே சாதிய ஏற்றத் தாழ்வோடு நடத்துவதும் உலகெங்கும் இன்றும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதுவா



உண்மையான இறை பக்தி? ஏன் இந்த மதம் என்னும் பேரில் பல சண்டைச் சச்சரவுகள்வருகிறது? மதப்பித்து காரணமா? இல்லை மக்களின் அறியாமையா? எந்த மதத்தின் கடவுள் மற்ற மதத்தவனை இப்படி நடத்து என்று சொல்கிறது? போதாக் குறைக்கு மதமும் அரசியலும் பின்னிப் பிணைந்து சிக்கலாக மாறி இருக்கிறது.

மியான்மரில் ரோஹிங்கியாக்கள் மீதான இன அழிப்பைத் திட்டமிட்டு நிகழ்த்துகிறது புத்த பேரினவாதம். இளைஞர்கள் கொலை, நடுத்தர வயதினர் கைது, பெண்கள் மீதான பாலியல் வன்முறை, வீடுகள் தீக்கிரை என அவர்கள்மீது நடைபெறும் வன்முறைகள் காரணமாக அவர்கள் அண்டை நாடுகளில் அகதிகளாக தஞ்சம் அடைந்துள்ளனர். அதே போல சிரியா -ஈராக்கில் ஐஎஸ் ஐஎஸ் தீவிரவாதம் தன் சக மதத்தவருக்கே பெரும் சவாலாகவும், உலகின் அச்சுறுத்தல் ஆகவும் இருக்கிறது.

ஆன்மீக தேசம் என்று உலகத்தவரால் அழைக்கப்படும் இந்தியாவிலும் அண்மையில் மாட்டிறைச்சி உண்ணுதல் தொடர்பாக அடிதடிகளும் , கொலையும் நடந்துள்ளது. மதங்களில், கடவுள்களில் யார் பெரியவர் என்ற போட்டி உலகம் முழுவதும்இந்த நூற்றாண்டிலும்தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பது எவ்வளவு பெரிய சோகம். அன்பை விதைக்க வேண்டிய இடத்தில் நாம் விஷத்தை விதைத்துக் கொண்டிருக்கிறோம். இதெல்லாம் மாற வேண்டுமாயின் மக்களின் அறியாமை இருள் விலக வேண்டும்.

மக்களிடையே சகிப்புணர்வின்மையின் பயங்கரமான விளைவுகளையும் சகிப்புத்தன்மை மற்றும் அகிம்சையின் தேவையை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காகவும் ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 16 ஆம் தேதியை உலக சகிப்புத்தன்மை தினமாக யுனெஸ்கோ நிறுவனத்தால் உலகெங்கும் கொண்டாடப் படுகிறது. இந்த நாளில் மக்களிடையே சகிப்புணர்வு இல்லாததால் ஏற்படும் மோசமான விளைவுகள் பற்றி எடுத்துச் சொல்லப்படுகிறது. மேலும் ஒவ்வொருவரும் மற்றவரின் அடிப்படை உரிமை, கருத்துகள் , சுதந்திரம், கலாச்சாரம், மத நம்பிக்கை போன்றவற்றை அங்கீகரிக்கவும் மதிக்கவும் வேண்டும் என்பதையும் இத்தினம் வலியுறுத்துகிறது.

சக மனிதனை மதிப்பதை விட பெரிய மதமோ, கடவுள் நிலையோ, அறிவியலோ இருந்து விட முடியாது. நாம் நாகரிகம் அடைந்த மனிதர்கள் என்பதன் முதல் நிலையே சக மனிதனை மதிப்பதே. ஆகவே அனைவரும் சக மனிதர்களை மதிப்போம், மனித நேயம் காப்போம்.

**வியன் பிரதீப்**

*thooral9@gmail.com*





# நன்றி மர்வானா

எனக்குத் தெரியாது
இது நான் தானாவென
மர்வானாவை புகைத்து
உள் நுழையும் வரை

ஆணின் விலா எலும்பிலிருந்து
படைக்கப்பட்ட
எனதுடலில் சிறகொன்று முளைக்குமென
எனக்கே தெரியாது
தொண்டைக்குள் வாளின் கூர்மையோடு
இறங்கும் புளிப்பேறிய வைனின் சுவையில்
எனதுடல் ஒரு பருந்தென

நள்ளிரவின் சுடர் இருளை
முழு நிர்வாணத்தினால் கிழித்து
எறிய முடியுமென

மூளையில் பதுங்கியிருந்த
பைசாசுகளின் சுமையை
சில முத்தங்களால்
இறக்கி வைப்பேனென
யாரோ சொன்னது போலன்றி

எனது இந்த உடல்
நிலத்தின் அழுக்காலானது
கலைந்து திரியும்
மேகத்தையும் போல
தீவிரமானது

இன்றிரவு
முதல் முறையாக
நானறியாத
எனதுடலை
என்னோடு
அழைத்து
வருகிறேன்
அறிந்துகொள்ளச் செய்த
மர்வானாவிற்கு
நன்றி!

– ராஜாத்தி சல்மா



# பெண்களின் உடை அரசியல் !

– வழக்கறிஞர் ம. வீ. கனிமொழி

ஆதி மனிதன் உடை இன்றி காடுகளில் அலைந்து திரிந்த போது பெண்ணின் உடல் அடிமைப்படுத்தப்படவில்லை, இழிவாகப் பார்க்கப்படவில்லை . நாகரிகம் அடைந்த மனிதன் , ஆடைகளை கண்டு பிடித் தான், மதத்தை உருவாக்கி னான் , இந்த இரண்டு கூறுகளுமே பெண்களை, அவர்கள் உடலை இழிவாகப் பார்க்க இந்தச் சமூகத்தை பழக்கப்படுத்தியது. எப்படி பெண்ணின் இயற்கை மாதவிடாய் குருதி தீட்டு என அருவருப்பாகப் பார்க்கப்படு கிறதோ அதே போன்று தான் பெண்ணின் உடலும் இங்கு அவமானம், இழுக்கு என பார்க்கப்படுகின்றது. அந்த நிலையில் இருந்து தான் ,

அவள் உடலை வெளிக்காட்டக் கூடாது , அவள் ஆணின் பொருள் என்னும் , மதங்களின் அரசியல் உள்ளது. அதனால் தான் அவள் உடலின் சில அங்கங்கள் தெரியும்படி நடந்தால் அவளுக்கு வேசி எனும் பட்டம் வெகு இயல்பாய் இந்தச் சமூகத்தில் தரப்படுகிறது.

ஒரு பெண் தன் உடல் தெரியும்படி உடை அணியும் போது அது அவமானம் என கருதும் பெரும்பான்மை மனிதர்கள் பெண்ணின் உடல் அவமானமானதா? என்ற கேள்விக்கு பதில் சொல்லிட வேண்டும் ; ஒரு பெண் தன் உடலை வெளிப்படுத்தும் உடை

அணிவதில் ஆண் மனதின் அரசியல் உள்ளது எனச் சொல்லும் பலர் ஒரு பெண் எப்போதும் தன்னுடலை மறைத்தே பயணிக்க வேண்டும் என்பதிலும் ஆண் மனதின் அரசியல் உண்டென்பதை உணர மறுக்கின்றனர் .

எடுத்துக்காட்டுக்கு இந்தியச் சூழலில் பெண்கள் சேலை உடுத்துகிறார்கள். அது கண்ணியமான உடை என்றும் நம்ப வைக்கப்படுகின்றனர் . ஆனால் அதில் இடுப்பு , மார்பகம் தெரிவதில் பிரச்சனை இல்லை . ஆனால் ஒரு பெண் இந்தியச் சூழலில் நீண்ட கால்சட்டை அணிந்து , மேலை சட்டை அணிந்து , அப்போது கையை மேலே தூக்கும்போது தெரியும் இடுப்பு பலருக்கு அருவருப்பாக இருக்கின்றது . ஏன் என்றால் இந்திய மக்களைப் பொருத்தவரை சேலை கண்ணியமான , நம் பண்பாட்டை பறைசாற்றுகின்ற உடை , ஆனால் ஜீன்ஸ், டி- சர்ட் அப்படி இல்லை என்கின்ற முன் பதிந்த எண்ணங்கள்.

மேற்கத்திய நாடுகளில் நீண்ட பிராக்(கவுன்) மட்டுமே பெண்கள் அணிவது கண்ணியமாக பார்க்கப்பட்ட சூழல் இருந்தது. இன்றைக்கு அவர்கள் அணியும் நீண்ட கால்சட்டை உடுத்த பெருமளவில் போராட்டங்கள் நடத்தியே இன்று இயல்பாக அணியும் உரிமையைப் பெற்றிருக்கின்றனர் என்பதே வரலாறு. 1919 ஆம் ஆண்டு Puerto Rico வைச் சேர்ந்த

லுய்சா காபிடிலோ( Luisa Capetillo) என்பவர்தான் பொது இடத்தில் முதன் முதலாக நீண்ட கால்சட்டை அணிந்தவர், அதன் காரணத்தால் மிகப் பெரிய குற்றம் இழைத்ததாக கைது செய்யப்பட்டு பின் விடுதலை செய்யப்பட்டார்.

1969 இல் சார்லோடே ரெய்டு( Charlotte Reid) என்பவர்தான் யு.எஸ் காங்கிரசில் நீண்ட கால் சட்டை அணிந்துச்சென்ற முதல் பெண்மணி. 1993 வரை நீண்ட கால் சட்டை அணிய யு. எஸ். செனட், பெண்களுக்கு அனுமதிக்கவில்லை. செனடர்கள் பார்பரா மிக்குல்சிகி (Barbara Mikulski) , கார்ல் மோசிலே பிரைன்( Carol Moseley Brain) என்பவர்கள் முதன் முதலில் கால்சட்டை அணிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

2013 இல் தான் பிரான்ஸ் அதன் நாட்டு பெண்கள் ஆண்கள் உடை , கால்சட்டை அணியலாம் என தங்கள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்தனர்.



உலகெங்கிலும் பெண் தன் உடைத் தேர்வைக் கூட சட்டங்கள் மூலமே பெற்றிருக்கின்றனர் என்பதை அறியும் போது இந்த உலகம் எந்தளவிற்கு ஆணாதிக்க

குறியீடாக உள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தந்தை பெரியார் 1920 களில் பெண்களே ஆண்களைப் போன்றே வசதியான உடை அணிந்து கொள்ளுங்கள் என தொலைநோக்குச் சிந்தனையுடன் கூறினார் .

இத்தாலி ரோம் நகரில் ஒரு 18 வயதுப் பெண் 45 வயது அவளின் மகிழுந்து பயிற்றுனரால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டாள். கீழ் நீதிமன்றம் அந்த



நபருக்கு தண்டனை வழங்கியது. வழக்கு மேல் முறையீடுச் சென்றது. இந்தாலியின் உச்ச நீதிமன்றம் அந்த தண்டனையை திரும்பப்பெற்றது . என்ன காரணம் சொல்லிற்று தெரியுமா? , அந்த மாணவி இறுக்கமான ஜீன்ஸ் அணிந்திருந்தார். அந்த ஜீன்சை ஒருவரால் கழற்றியிருக்கமுடியாது. அந்த இறுக்கமான உடையை பெண்ணும் அனுமதி அளித்தால் மட்டுமே கழற்றியிருக்க முடியும் . எனவே இது பாலியல் வன்புணர்வு இல்லை . அந்த பெண்ணின் ஒப்புதலோடு நடந்த காரணத்தால் இதற்கு தண்டனை வழங்கி இருப்பது தவறு என்றது. அந்த தீர்ப்பு வழங்கிய அடுத்த நாள் இத்தாலி நாட்டின் பார்லிமெண்டில் உள்ளப் பெண்கள் , ஜீன்ஸ் அணிந்து கொண்டு , "ஜீன்ஸ் : பாலியல் வன்புணர்விற்கு அயிலிட சான்று( *Alibi*) " என பதாகைகள் ஏந்தி தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர் . 2008 இல் இத்தாலிய உச்ச நீதி மன்றம் தன் போக்கை மாற்றிக்கொண்டது.

இப்படி பல போராட்டங்கள் மூலம் மட்டுமே தங்கள் விருப்பப்படி வசதியான உடையைப் பெண்கள் இன்றைக்கு போடும் நிலை கிட்டியுள்ளது. அதில் முக்கியமான போராட்டமாக நாம் கருத வேண்டியது பொது இடங்களில் குழந்தைக்கு பாலூட்டுவது.

பெண் பாலூட்டும் போதும் , ஆடையை மறைத்துக்கொண்டு கொடுத்தால்தான் பண்பாடு எனப் புல்லரிக்கும் நம் மனங்கள் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும் , பாலூட்டுதல் என்பது குழந்தையின் பசியாற்றுதல். நாம் நமக்கு பசிக்கும்போது உணவை மறைத்து வைத்து உண்பதில்லை. ஆனால் பெண்ணின் மார்பகங்களைக் காமத்திற்காக மட்டுமே அறிந்து வைத்திருக்கும் இந்தச் சமூகம் அந்த மார்பகங்கள் மூலம் பாலூட்டப்படும்போது அதை பெண் உடலின் மறைப்பு அங்கம் என்பதால் மறைத்தே பாலூட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

*I don't pee or masturbate in public, so why should a woman breastfeed?"*

என கேட்கும் அறிவாளிகளிடம் கேட்க ஒரே கேள்விதான் உள்ளது. குழந்தைக்கு பாலூட்டுவது அசிங்கமானது, உடல் கிளர்ச்சி தொடர்புடையதாக இந்தச் சமூகம் பார்க்கின்றதா? ஆம் எனின் இந்தச் சமூகத்தின் மனங்கள் பக்குவப்படுத்தப்பட வேண்டி உள்ளது.

அதே நேரத்தில் மற்றொன்றையும் புரிந்து கொள்ள வேண்டும் இந்தியாவில் கழிப்பிடங்கள் இல்லாத காரணத்தால் வெளியில் மறைவில் காலைக்கடன்களை முடிக்கச்செல்லும் பெண்களிடம் பாலியல்

அத்துமீறல்கள் நடக்கின்றன. இதை எந்தப் பண்பாடும் பேசுவதே இல்லை என்பதே பெண்களுக்கு எதிரான அருவருப்பான சமூகச் சூழல் இங்கு இருக்கின்றது என்பதை உணர்த்துகின்றது.

உடை அணியும்போது பெண்ணின் உடல்வாகும் இங்கு எள்ளி நகையாடப்படுகின்றது. இந்த உடம்பிற்கு இந்த லெகின்ஸ் தேவையா என்பதும் கூட பெண் என்பவள் ஒல்லியாக இருக்க வேண்டும் , அப்படி இல்லாதவர்கள் உடை அணிவதில் கவனமாக இருக்க வேண்டும், என திரும்ப திரும்ப பெண் உடலும் , உடையும் இந்த சமூக மதிப்பீடுகள் படியே இருக்க வேண்டும் என்பதும் பெண்ணை அவள் உடல் , உடை சார்ந்து மட்டுமே சிந்திக்க வேண்டும் , அதுவும் சமூக மதிப்பீடுகளுக்கு மட்டுமே அவர்கள் உடை அணிய வேண்டும் என்பதே மீண்டும் வலியுறுத்தப்படுகின்றன.

உண்டிச்சுருங்குதல் பெண்டிற்கழகு, எனச் சொல்லும் கூறுகள் ஆண்களுக்கு ஒரு போதும் வழங்கப்படுவதும் இல்லை , உடைக்காக, உடலுக்காக அவன் மதிக்கப்படுவதும் இல்லை . அவன் மதிப்பு அவன் ஆண் என்பதற்காக மட்டுமே அந்தச் சமூகம் வழங்குகின்றது.

மேலும் ஒரு பெண் தன்னுடலை மதித்தால் உடல் தெரியும் படி உடை அணிவார்களா? என்ற கேள்வியே குழந்தைத்த னமானது.

இயற்கையில் மனித உடல்கள் அழகானவை, அதை வழிபடவும் ஒன்றும் இல்லை , அவமானப்படவும் ஒன்றும் இல்லை என்ற சிந்தனையை நாம் இந்தச் சமூகத்தில் வளர்த்தெடுக்க முடியாதக்காரணத்தால்தான் பெண்களின் ஒளிப்படத்தை அவர்கள் அனுமதியின்றி மார்பிங் செய்து வெளியிடும்போது ஒரு பெண் அவமானத்தால் கூனிக்குறுகி தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள்.




அடுத்து வைக்கப்படும் குற்றச்சாட்டு ஒரு ஆண் பெண்ணின் அரைகுறை ஆடைக்கண்டு கிளர்ச்சி அடைவார்கள் என்பதே. உண்மையில் ஆண் இந்தச் சமூகம் பெண்கள் மீது சுமத்துகின்ற ஒழுக்க மதிப்பீடுகள் காரணமாக சிதைந்த மனத்தோடே வளர்த்தெடுக்கப்படுகின்றனர் .

முழு உடையில் எப்போதும் இருக்க வலியுறுத்தும் அரபு நாடுகளில் பெண் கைவிரல் தெரிந்தாலும் ஆண் கிளர்ச்சி அடைகிறான் . பெரும்பாலான பாலியல் வன்முறைகளுக்கு உடையை ஒரு காரணமாக கூறுகின்ற சமூகத்திடம் கேட்கப்பட வேண்டிய ஒரே கேள்வி , 2 வயது பெண் குழந்தைக்கும், 70 வயது மூதாட்டிக்கும் கூட உடை ஒரு காரணமா? என்பது தான் !

அதுமட்டுமல்லாமல் இந்தியாவில் பாலியல் வன்புணவிற்கு உள்ளாகும் பெரும்பான்மையான பெண்கள் சேலை, அல்லது முழு உடல் மூடிய உடைகளையே அணிந்திருப்பவர்கள் என்பதை செய்திகளைப் படிக்கும் போது நாம் தெரிந்து கொள்ள முடியும்.

பெண்களின் உடல் உயிரியல் படி சில மாற்றங்கள் கொண்டது, அந்தப் புரிதலை ஏற்படுத்துவது மட்டுமே இங்கே பெண்களின் உடல் , உடை இவற்றில் உள்ள பெண்களை அடிமைப்படுத்தும் கூறுகளை களையும், அந்தப் புரிதலை எதிர்பாலினத்திற்கு, ஆணாதிக்கச் சிந்தனையை ஏற்றுக்கொண்ட பெண்கள் இருவருக்கும் உணர்த்துவது காலத்தின் கட்டாயம். இவர்களோடு தொடர்ந்து உரையாடுவோம்!!

# Being Dalit



During a very casual conversation with one of my friends, I happened to fret about why it was so hard and yet imperative to be married. She then went ahead and asked me a bunch of questions about the kind of guy I was inclined to be with, how he should look and other girlish things. At some point in the conversation, she took it upon herself and suggested she will look for men in her "caste pool". I was slightly taken aback and asked her out of my curiosity why she wouldassume I belonged to her caste. Her answer was a bit startling to me but nevertheless expected. We traced our roots back to the same village in Tamilnadu.I spoke like one of her own and I dont just mean lingo. Here I was sitting with one of my close friends and somehow we broached the topic of casteism. I wanted tocorrect her so badly and yet I felt there was no need to. If it's an assumption how should I be responsible for it? She was trailing off listing the eligiblebachelors she knew, what they were doing, how much they were making, how the inlaws would be like and I was still pondering about her statement about the caste pool. So I stopped her midway and said, "You know, I do not belong to the same caste as yours". Her reaction was of course priceless, open mouthed with a sense of shock and horror and then she mouthed it, "Oh my god, what are you?". Dalit I said.



**What is it that makes us Dalits so ashamed and so tentative that we find the necessity to hide? Why are we so troubled about being outed? What do we have to lose?**

On the way back home from my friends' I was caught up in some sort of mental quagmire. My mind was racing thinking about all the times when I felt completelyalone in a classroom with non-Dalits and then thought of the very few peers I came across who were Dalit. I realised then I was never told by anyone howDalit I should be. How much of a Dalit I can be? I grew up knowing about the varnas, I grew up knowing about brahmanism but what was I? It struck me how little we (Dalits) know of our own selves. Either we are taught never to discuss caste or we are told to shut up and keep going about life as is. I am one of those nouveau Dalits you come across. 3rd generation graduate. Lived a largely protected life, never had the misfortune of undergoing mind scarring discrimination. A "new age" Dalit if you will. It was then that I set off trying to understand this subculture that existed within Dalits. The ones who were Dalits on their community certificates, but who would not rise




> **“Why must I tell the world what caste I belong to? What good will come out of it?”**

up if they were asked in a show of hands. The ones who travelled far and wide in search of education or work and determined sending money back home would actualize their social responsibility. The ones who adopted and adapted the myriad hindu customs and practices no matter how illogical they seemed in a desperate attempt to belong to the fabric of Hinduism.

So many Dalits are primarily in denial over our caste. Why must I tell the world what caste I belong to? What good will come out of it? While it may not grant any immediate

gratification, it goes a long way in acknowledging our birth. Sure, there will be comments on how "not talking about castes" will make it all go away, but the reality says otherwise. How is it that a person can suffix their caste name - Iyer, Iyengar, Nadar, Chettiar, Gounder et al. but when we speak of being Dalit it automatically becomes a "crying wolf" episode? The minute we stop denying ourselves our rights as Dalit, we will stop planning escaperoutes.

**Who else feels sorry for being born into the caste that they are? Why must we?**

Once we have crossed the escapism and denial part of being Dalit, arrogance plays a rather important role. I want to go on record and say I am arrogant about my caste. I do not think for a second that I have to apologize to anyone for being who I am. I dont intend to bend myself backwards for others to walk over me. When Thevars can proudly toot their own horn and claim that their swords smell of blood, when Brahmins can claim themselves to be the purest of the pure, can I not be proud of the fact that I have risen up from the ground?

Sometimes when we are on a soul searching trip inside our heads, our rage evolves into a much more mature, albeit calmer pique. The episode with my friend opened some sort of pathway to a realization that I did not experience before. There was some amount of joy in identifying as a Dalit, a kind of acceptance within myself that liberated me. I was drawing comparisons in my own head about being like Hulk when he says "That's my secret, Captain. I am always angry".

It doesnt imply that Dalits throw a facade, of being mellow but burning with rage. It only signifies "I am in control and ready to face casteism."


A sudden burst of eagerness accompanied this liberation and I wanted to



அட்டைப்பட
ஓவியம் - ஓவியர்
**இரவி பேலட்.**

do more. However well intended my eagerness was, it unfortunately did not materialise into anything. There were days when I would have meaningful conversations about casteism, how it affects people, what can I (we) do about it but that was the end. Much like the viral meme of today, eagerness was fleeting.

The conversation with my friend was several years ago and yet to grow and contribute towards a movement bigger than self took a long time. I have since married. I dealt with being Dalit like I would deal with death. Starting with denial all the way to acceptance is a rather treacherous journey. However hard it may seem, I would still suggest everyone to go through with it. This is for all those up and coming Dalits - accept yourself and be proud. And share the pride. In passing conversations with fellow Dalits I let my pride




shine through. It gives them hope. It enables them to be accepting of themselves.

What we all want is for a place where humans are treated like humans. Not color coded or caste divided or gender biased. For this utopia to be a reality, change must begin within. Next time someone asks about your caste talk about it. Their discomfort is your first step towards real change. If they do not appreciate your company beyond that, you will have made a sound judgement about the kind of posse you want in your circle. Anger does not lead upto any frutiful end but it is definitely gives you the buyoancy you need to move on ahead. I have learned to use it for my benefit and that of others. Today I talk about how I came to be Dalit. If this can encourage someone to be true to their own selves, then this article has accomplished what it set out for. To be Dalit.

**-Vader**

இங்கு வெளியாகும் அனைத்து படைப்புகளும் எழுத்தாளரின் சொந்த கருத்துக்களே.
Thoughts expressed in these articles are that of the writers.